இப்போது வளர்ச்சி அடைந்து வருகின்றது. எனவே, மலையடியில் வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்குப் பண்ணையை ஏற்படுத்திக் கொடுத்தால், அதன்மூலம் வருவாயை ஈட்டி அவர்களுடைய வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ள வசதி ஏற்படும். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து, இந்தக் காளான் வளர்ப்புக்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடுத்த வினாவினுடைய அவசியத்தை அறிந்துதான் இன்றைக்குத் தமிழக அரசு, இந்தக் காளான் வளர்க்கக் கூடிய தொழிலில் ஈடுபடக்கூடிய ஏழையெளிய சிறு விவசாயிகளுக்கு வேண்டிய பயிற்சியை அரசு வழங்கி வருகிறது. அதே நேரத்தில் இதற்கு ஆதாரமான விதைக் காளான் உற்பத்தி நிலையங்கள்தான் நாட்டுக்குத் தேவை. எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இவ்வாண்டு இரண்டு விதைக் காளான் நிலையங்களும், இரண்டு நுண்கிருமி நீக்கம் செய்யப்பட்ட கம்போஸ்ட் உற்பத்தி நிலையங்களும் அமைப்பதற்கு ஆணை வழங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *430*, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

430---

ஒசூரில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

24563*–திரு. கே. ஏ. மனோகரன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஒசூர், தேன்கனிக்கோட்டைப் பகுதியில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை பகுதியில் உள்ள *20* ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களில், *9* கூட்டுறவுச் சங்கங்கள் தேன்கனிக்கோட்டை பகுதியிலும் *5* கூட்டுறவுச் சங்கங்கள் ஒசூர் பகுதியிலும் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 6 கூட்டுறவுச் சங்கங்களில்

ஓசூர் பகுதியில் 2 சங்கங்களும், தேன்கனிக்கோட்டை பகுதியில் 4 சங்கங்களும் செயலற்ற நிலையில் உள்ளன. மேலும் ஓசூர் பகுதியில் 4 கூட்டுறவுச் சங்கங்களும், தேன்கனிக்கோட்டை பகுதியில் 7 சங்கங்களும் அமைக்க துறையால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல்படாமல் இருக்கக்கூடிய சங்கங்களை அந்தப் பகுதியிலே உள்ள சீதோஷ்ண நிலை காரணமாக, ஆடுகள் நன்றாக வளரக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினால், அதை மறுபரிசீலனை செய்து மீண்டும் துவக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐரோப்பிய வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ஆடு வளர்ப்பதற்காக கடன்கள் நிறைய கொடுப்பதாக அறிகிறோம். ஆகவே, கூடுதலாக அந்தப் பகுதிகளிலே சங்கங்களை அமைக்க அரசு முன் வருமா? அதிலும் குறிப்பாக மகளிர் சங்கங்கள் அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. வெங்கடராம ரெட்டி.

திரு. மு. வெங்கடராம ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, 9 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் என்னுடைய தொகுதியில் தேன்கனிக்கோட்டையில் இருக்கின்றன. ஆனால் அந்த 9 சொசைட்டிகளும் பண வசதி இல்லாமல் டிபங்ட்டாக இருக்கின்றன. அந்த சொசைட்டிகளுக்கு லோன்ஸ் கிடைப்பதில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சொசைட்டிகளுக்கு லோன்ஸ் சாங்ஷன் பண்ணி, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நடப்பதற்கு முயற்சி எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 431, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர்.